# 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலத்திற்கான உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் தொடர்பிலான ஊடக வெளியீடு

***6 ஜீன் 2017, கொழும்பு, இலங்கை:*** 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலத்தினை (இச் சட்டமூலம்) வாபஸ் செய்கின்றமை தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள முடிவினை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது (CPA) வரவேற்கின்றது. இவ் வாக்குறுதியானது இன்று உயர்நீதிமன்றத்தில் இச் சட்டமூலத்திலுள்ள இரண்டு ஏற்பாடுகளின் அரசியலமைப்புச் செல்லுபடித்தன்மையினை சவாலுக்கு உட்படுத்தியிருந்த, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) மற்றும் அதன் நிறைவேற்று பணிப்பாளரினால் (SC SD 7/2017) அணைக்கப்பட்ட மனு உள்ளடங்கலான மனுக்களை கேட்பதற்கான விசேட தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபா் திணைக்களத்தின் சார்பாக தோன்றிய சட்டத்தரணியினால் வழங்கப்பட்டது.

இச் சட்டமூலத்தின் வாசகம் 2 இன் பிரிவு 6அ(2) மற்றும் (6) என்பன அரசியலமைப்பின் உறுப்புரைகள் 3, 4(ஈ), 11, 12(1), 13(1), 13(2), 13(3), 14(1) மற்றும் 17 என்பனவற்றுடன் முரண்படுவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது (CPA) வாதிட்டிருந்தது. இவ் ஏற்பாடுகள் ஆக்கப்படுகின்ற பட்சத்தில் அவை, சட்டத்தரணிகள் பொலிஸின் கட்டுக்காவலில் இருக்கும் நபர்களை அணுகுவதனை அல்லது பொலிஸ் நிலையத்தினை அணுகுவதனை, அத்தகைய அணுகுதலானது நடாத்தபடுகின்ற விசாரணைக்கு அநீதி விளைவிக்கும் அல்லது விசாரணையினை பாதிக்கும் என்ற அடிப்படையில், மறுப்பதற்கு பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஒருவரை அனுமதிக்கும். இதன் காரணமாக இவ் ஏற்பாடுகளானவை அரசியலைமப்பு மற்றும் சட்டத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள கட்டுக்காவலிலுள்ள நபர்களின் உரிமைகளுடன் முரண்படுவதாக அமைகின்றன.

அரசியலமைப்பின் கீழுள்ள நியாயமான விசாரணைக்கான உரிமையானது கட்டுக்காவலில் உள்ள எந்த ஒரு நபருக்கும் சட்டத்தரணி ஒருவரினை அணுகுவதற்கான உரிமையினையும் உள்ளடக்கியுள்ளது என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது (CPA) வாதிட்டது. இச் சட்டமூலத்தின் வாசகம் 2 இன் பிரிவு 6அ(2) மற்றும் (6) என்பன, கட்டுக் காவலில் உள்ளவா்கள் சட்டத்தரணியினை அணுகுவதனால் அல்லது சட்டத்தரணி ஒருவா் பொலிஸ் நிலையத்தினை அணுகுவதனால் நடாத்தப்படுகின்ற விசாரணைக்கு ஏற்படக்கூடிய கேடு அல்லது தாக்கத்தினைத் தீர்மானிப்பதற்கான புறநிலையான கட்டளை விதிகள் எதனையும் குறிப்பிடாது மிகவும் பரந்த முறையில் வரையப்பட்டுள்ளன. இது போதுமான அளவில் தனது கட்சிக்காரரினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சட்டத்தரணியின் இயலுமையினை மட்டுப்படுத்துகின்றது. மேலும் இவ்

ஏற்பாடுகள் சித்திரவதைக்கு உட்படாமலிருப்பதற்கான உரிமை உள்ளடங்கலான கட்டுக் காவலிலுள்ளவர்களின் ஏனைய உரிமைகளின் மீறல்களை அனுமதிக்கக்கூடியவை ஆகையினால் இவை துஷ்பிரயோகத்திற்கு வழிவகுப்பனவாயும் உள்ளன.

இவ் ஏற்பாடுகள் தற்காலிகமாகச் செயற்படுத்தப்படுவதற்காக முன்மொழியப்பட்டதே எனினும் இது போலவே தற்காலிக சட்டவாக்கமாக ஆக்கப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA) காலப்போக்கில் நிரந்தரமானதனை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது(CPA) குறித்துக் காட்டுகின்றது. இச் சட்டமூலமானது 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட போது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது இச் சட்டமூலம் தொடர்பான தனது விசாரத்தினை எழுப்பியிருந்தது. நீதிமன்றத்திலே வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது இச் செயன்முறை வெளிப்படையானது மற்றும் உள்ளடங்கலானது என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு, இவ் விடயம் தொடர்பான சமர்ப்பிப்புக்களுக்கு அழைப்பு விடுக்குமாறும் மற்றும் பொருத்தமான அனைத்துப் பங்குதாரர்களுடனும் கலந்தாலோசிக்குமாறும் அரசாங்கத்தினை வலியுறுத்துகின்றது.